அதே போல சிறு கனிம விதியில் (36)ல் பொது சாலை, செயற்கையாக போடப்பட்ட சாலை, வண்டிப்பாதை மற்றும் நடைபாதையில் இருந்து 50மீ இடைவெளிஇருக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளதாகவும், ஆனால் புல எண். 514, 515ல் கிழக்குபுறம் குவாரிக்கு அருகில் தார்சாலை, 10 மீ இடைவெளியில் உள்ளதாக மைனிங் பிளான்–ல் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அதுமட்டும் அல்லாமல் குவாரியின் வடமேற்கு பகுதியில் நொய்யல் ஆற்றின் பாலம் புல எண். 509 முதல் 554க்குள் ஆற்று படுகையில் மேம்பாலம் உள்ளதாகவும், இது குவாரியிலிருந்து 65 மீட்டர் இடைவெளியில் உள்ளதாகவும், ஆனால் சிறு கனிம விதிகளில் 500மீ இடைவெளி தேவை என பிரிவு 35ல் கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். ஒன்றிய அரசு, உள்ளாட்சி அமைப்புகள், மத்திய/மாநில அரசின் துறைகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றின் ஏதாவது ஒன்றின் முதன்மைப்பணிகள் நீர் ஏற்றும் நிலைத்தொட்டிகள், நீர் வழங்கும் ஏற்பாடுகள் அமைந்துள்ள இடங்களில் 500 மீட்டர் இடைவெளியில் சிறு கனிமங்கள் எதுவும் வெட்டி எடுக்க கூடாது என உள்ளதாக கூறினார். ஆனால் இந்த குவாரியினுடைய வடமேற்கு புறத்தில் அரசம்பாளையம் முதல் குப்பம்பாளையம் வரை 100 மீ சுற்றளவிற்குள் அரசின் ஆழ்துளை கிணறு உள்ளதாகவும், எனவே இங்கு விதிகள் மீறப்பட்டுள்ளதாக கூறி அனுமதி வழங்கக்கூடாது என கூறினார். அரசம்பாளையம் முதல் குப்பம்பாளையத்திற்கு பைப்லைன் 10மீ இடைவெளி மட்டுமே உள்ளதாகவும், இவை நிலத்தின் அடியில் செல்லாமல் பாறையின்மீது செல்வதாகவும், இது அரசின் விதிகளின்படி 50மீ இடைவெளியில்லாததால் அனுமதி கொடுக்க இயலாது என கூறினார். குவாரியின் வடமேற்கு பகுதியில் நொய்யல் கால்வாய் 55 மீ தொலைவில் இருப்பதாக மைனிங் பிளானில் இருப்பதாகவும், லைனிங் செய்யப்பட்ட நிரந்தர கட்டுமானம் செய்யப்பட்ட கால்வாய் இருப்பதால், அரசு விதிகளின் படி 300மீஇடைவெளி இல்லாததால் இதற்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது என கூறினார்,சிறு கனிம சலுகை விதிகளிலன்படி குவாரியை சுற்றி 300மீ சுற்றளவில் அரசு அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், தற்காலிக/நிரந்தர வீடுகள் இருக்ககூடாது என கூறப்பட்டுள்ளதாக தெரிவித்தார். A.D,

மைன்ஸ் அவர்களின் அறிக்கையில் தற்காலிக வீடுகள் இடித்து அப்புறப்படுத்தப்படுவதாக தெரிவித்ததாக கூறினார்.

குவாரியின் மேற்கில் 153மீ தூரத்தில் வீடு உள்ளதாகவும், வடகிழக்கில் 205 மீ, 297மீ, 151மீ தொலைவில் வீடுகள் உள்ளதாகவும், தெற்கில் 222 மீ தொலைவில் வீடு உள்ளதாகவும், கிழக்கில் 279மீ தொலைவில் வீடுகள் உள்ளதாகவும் அவ்வாறு தற்காலிக/நிரந்தர வீடுகள் இருக்கும் பட்சத்தில் அனுமதி கொடுக்க கூடாது எனவும்,மேலும், ஆழ்துளை கிணறு மற்றும் நீர்ஏற்றும் கிணறும் இருப்பதால் அனுமதி கொடுக்க கூடாதுஎன கூறினார். குவாரியின் அருகில் குவாரி இருந்தால் சிறு கனிம சலுவை விதிகள் படி 10 மீ இடைவெளி இருக்க வேண்டும். ஆனால் இந்த குவாரியின் கிழக்கு புறம் புல எண்.509ல் 10மீ இடைவெளி இல்லை எனவும், வடமேற்கு பகுதியில் புல எண். 513ல் 10மீ இடைவெளி இல்லாததால் இந்த குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க கூடாது என கூறினார். குவாரியின் ஆவணங்களில் 45 வகையான ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும், பலமுறை வழியுறுத்தியும் அவற்றில் 7 ஆவணங்கள் மட்டுமே உள்ளதாகவும், ஏ1 அறிக்கை, RDO கடிதம், பொதுமக்கள் கருத்து, மைன்ஸ் கடிதம், PWD கடிதம், பஞ்சாயத்து அலுவலக கடிதம் போன்ற மீதமுள்ள 38 வகையான ஆவணங்கள் இல்லை எனவும்,வருவாய் மாவட்டத்தில் 335 குவாரிகள் உள்ளதாக கூறினார். அரசு அலுவலகங்களில் ஆவணங்களை திட்டமிட்டே வழங்கவில்லை எனவும், அவை இருந்தால்தான் உண்மை தன்மை அறியுமுடியும் எனவும் கூறினார்.

கரூர் மாவட்டத்தில் கடந்த 6 ஆண்டுகளில் அதிக வெப்பம் காணப்படுவதாகவும், தமிழ்நாட்டில் குறிப்பாக கரூர் மாவட்டத்தில் கல் குவாரிகள் அதிகம் இருப்பதால் அதிக வெப்பம் உள்ளதாவும், இதனால் பள்ளிகளுக்கு 10 நாட்கள், 12 நாட்கள் விடுமுறை அளிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். சுற்றுச் சூழல் மாசு குறித்து 6 மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு நடத்தகேட்டுக் கொண்டார். பசுமை வளையம் குறித்து 1650 மரக்கன்றுகள் நடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இவை வேம்பு, அரசு, பாதாம், அத்தி போன்ற நாட்டு மரங்கள் நடப்பட வேண்டும் எனவும், ஆனால் நாட்டு மரங்களுக்கு பதிலாக சவுக்கு மரங்கள் மட்டுமே வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அடுத்ததாக வெடியை பொருத்தவரையில் மதியம் 12 முதல் 2 மணி வரைதான்

வெடிப்பதாக தெரிவித்துள்ளனர். ஆனால் மாலை 5 மணிக்கு மேலதான் வெடி வைக்கப்படுவதாகவும் இதனால் அதிர்வு ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

கரூர் மாவட்டத்தில் 3.5 ரிக்டர் அளவு நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். கடந்த ஆண்டு திருப்பூர் மாவட்டம் ராஜபாளையம் முதல் கரூர் அரவக்குறிச்சி வரை நில அதிர்வு ஏற்பட்டதாக கூறினார். நில அதிர்வு மற்றும் அதிகமான வெப்பம் உள்ள பகுதியாக இருப்பதால் அனுமதி வழங்க கூடாது என தெரிவித்தார். குவாரி இல்லை என்றால் எவ்வாறு மணல் கிடைக்கும் என்பது நியாயமான கேள்விதான் என்றும், அதற்கு மணல் தேவைக்குஅடிக்கடி, நில அதிர்வு, சுனாமி ஏற்படும் பகுதிகளில் வெளிநாட்டில் இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளில் மணல் இறக்குமதி செய்து கொள்ளலாம் என்று நீர்வளத்துறை சார்பாக 6 அரசாணைகள் இயற்றப்பட்டுள்ளதாகவும் (அதிமுக அரசின் – 5 அரசாணைகள், திமுக அரசின் – 1 அரசாணை) தெரிவித்தார். அவற்றை நடைமுறைபடித்தினால் மாதம் 5 இலட்சம் மெ.டன் மணல் இறக்குமதி செய்யலாம் என்றும், தமிழகத்திற்கு 15 இலட்சம் மெ.டன் தேவை எனவும் கூறினார். இயங்கி முடித்த குவாரிகளுக்கு 60 நாட்களில் கம்பிவேலி போடவேண்டும் என்றும் அவ்வாறு போடாதபட்சத்தில் உயிரினங்கள், கால்நடைகள் பாதிப்படைவதாகவும் தெரிவித்தார், எனவே, கம்பிவேலி போடுமாறு கூறினார். கம்பிவேலி போட Fund இல்லாத பட்சத்தில் மாவட்ட கனிம நிதியிலிருந்து போடுமாறு கேட்டுக் கொண்டார். குவாரியின் அறிக்கையில் 6 இடங்களில் காற்று மாசு குறித்த ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக மைனிங் பிளானில் கூறப்பட்டுள்ளது. மண்ணுக்கோ, தண்ணிக்கோ ஆய்வு செய்ய மின்சாரம் தேவைப்படாது. ஆனால் காற்றுமாசு ஆய்வு செய்ய கரண்ட் தேவைப்படும், அவை மார்ச் 1 முதல் மே 2025 வரை 6 இடங்களில் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது,அவற்றை எடுக்க கரண்ட் 24 மணி நேரம் கரண்ட் தேவை எனவும், அவ்வாறு காற்றுமாசு ஆய்வு செய்ய எந்த வீடுகளில் இருந்து, கிணறுகளில் இருந்து தொழிற்சாலைகளில் இருந்து கடைகளிலிருந்து கரண்ட் எடுக்கப்பட்டது அவ்வாறு எடுக்கப்பட்டிருந்தால் அந்த சர்வீஸ்சின் மூன்று மாத கரண்ட் பில் விபரம் வேண்டும் என்று கூறினார்.

நாமக்கல் மாவட்டத்தில் 50க்கும் மேற்பட்ட குவாரிளுக்கு லேப் இல்லாமல், ஆய்வு பண்ணாமலே ஆய்வு செய்ததாக அறிக்கை வைக்கப்பட்டுள்ளதாக கூறினார். கரண்ட் எடுத்தமைக்கான அறிக்கை வைத்தால் மட்டுமே அது உண்மை என்றும், இல்லை என்றால் அந்த குவாரியின் அனுமதியினை இரத்து செய்ய இதுவும் காரணமாக வேண்டும் எனவும் கூறினார். எந்த தொழிலாளருக்கு ESI, PF அறிக்கை சொல்லியுள்ளார்கள். 2022ல் ஒருவர் இறந்த போது என்.டி.சி. குப்புசாமி குவாரியிடம், மாவட்ட ஆட்சியரிடம் போராடி 24 இலட்சம் பெற்றுக் கொடுத்ததாகவும், தொழிலாளர்கள் இறந்தவிட்டால் 1 இலட்சம் அல்லது 2 இலட்சம் கொடுத்து கணக்கினை முடித்துவிடுவதாகவும், எனவே, சட்டப்படி ESI, PF தொழிலாளர்களுக்கு தவறாமல் தரவேண்டும் என கேட்டுக்கொண்டார். தண்ணீரின் நிலை என்பது 62 மீட்டர் என்பது 700அடி ஆனால் இங்குள்ள கிணறுகள் 70 முதல் 80அடிக்கு மேல் இல்லை. 700 அடியில் குவாரி வெட்டினா எந்த கிணற்றில் நீர்இருக்கும்என்று கேட்டார். மாசு கட்டுப்பாடு வாரியம் TNPCB & You 2020 புத்தகத்தில் பரமத்தி பிர்கா ப.எண். 247ல் ஓவர் எக்ஸ்பிளாய் ஏற்பட்டுள்ளதாகவும், இப்பகுதியில் இதற்கு மேல் தண்ணீர் எடுத்து பயன்படுத்த முடியாத நிலை உள்ளதாக தெரிவித்துள்ளதாக கூறினார்.

தாங்கள் திருச்செங்கோட்டில் ஒரு VAO மேல வழக்கு போட்டுள்ளதாகவும் முத்தூர் குட்டப்பாளையத்தில் புகார் கொடுத்து விசாரணையில் உள்ளதாக கூறினார். எனவே, பொய் சான்று கொடுத்த VAO மேல உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக தெரிவித்தார். நமது மாவட்டத்தில் உள்ள 335 இயங்கி மூடப்பட்ட குவாரிகளையும் ஆய்வு செய்ய வேண்டும என சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை 2021 டிசம்பர் வழக்கு தீர்ப்பு சொன்னார்கள், அதனை நடைமுறைபடுத்தாததால் 2022 ஏப்ரல் மாதம் நமது மாவட்ட ஆட்சியராக இருந்த திரு. பிரபுசங்கர் அவர்கள் DRO சார் தலைமையில் ஒரு குழு அமைத்து மாவட்டம் முழுவதும் இயங்கி கொண்டுள்ள, இயங்கி முடித்த அனைத்து குவாரிகளையும் ஆய்வு செய்து ரிப்போட்டு கொடுக்க சொல்லியிருந்தார்கள், வருடம் நான்கு ஆகியும் நூற்றுக்கணக்கான குவாரிகள் மட்டுமே ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக தகவல் தெரியவந்துள்ளது. சென்ற மாதம் தென்காசியில் ஒருத்தர் வழக்கு போட்டார் 58

குவாரிகளும் ஒரே மாதத்தில் ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் இங்க மட்டும் 335 குவாரிகளில்நூறு குவாரிகள் ஆய்வு செய்யப்பட்டு 120 கோடிக்கு அபராதம் போடப்பட்டுள்ளதாக A.D, மைன்ஸ் வாய்மொழித்தகவல் தெரிவித்துள்ளார்கள். எம்.எல்.ஏ வா இருந்த ஒருத்தர் குவாரியின் மீது அளித்த புகாரின் அடிப்படையில் 23 கோடி அபராதம் போட்டுள்ளதாகவும், அவர்கள் 200 டன் வெடி மருந்து தேவை. 1 குழிக்கு 1/2 கிலோ வெடிமருந்து, 1 கிலோ வெடிமருந்து பயன்படுத்தினால் 6 டன் கல் கிடைக்கும், 2 இலட்சம் கன மீட்டர் 3இலட்சம் டன் கல் கிடைக்க வேண்டுமானால் 100 கணக்கான வெடி மருந்துகள் தேவை என்றும், சென்ற வாரம் உயர்நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் தமிழ்நாட்டில் 1750 குவாரிகளில் 350 குவாரிகளுக்குத்தான் கிரிமினல் வழக்கு போடப்பட்டுள்ளதாக கூறினார். மீதமுள்ள குவாரிகளுக்கு ஏன் கிரிமினல் வழக்குபோடவில்லை என்று நீதிமன்றத்தில் கேட்டதாக கூறினார். கற்களை வெட்டி எடுக்கும் போது ஜேசிபி வைத்தோ, மம்மட்டியை வைத்தோ எடுக்க முடியாது. அதற்கு வெடிமருந்து தேவைப்படும், அவ்வாறானால் அந்த வெடி மருந்துகளை எங்கிருந்து கொண்டுவந்தாங்க என கேட்டார். கரூர் அபாயகரமான இடம் நாடு முழுவதும் கவனிக்கத்தக்க இடம்,CBI விசாரணையில் சட்ட விரோதமான வெடிமருந்து நடமாடுவதாகவும், அதற்கு அபராதம் போட்டதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது.

தாசில்தாரில் இருந்து கலெக்டர், காவல்துறை எஸ்.ஐ அதிகாரியில் இருந்து எஸ்.பி. இது இல்லாமல் ஒன்றிய அரசினுடைய DGMS – Doctor General of Minesசென்னை வெடிமருந்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது என்றும், சென்ற வாரம் திருப்பூரில் இருந்து கர்நாடகாவிற்கு சென்ற பேருந்தில் பெங்களூர் பஸ் ஸ்டேண்டில் வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக செய்தி வெளியானது. இப்படி சட்ட விரோதமாக வெடிமருந்துக்கு காவல் நிலையத்தில் வழக்கு எதுவும் இல்லை என்றும், அமைச்சர் ஐ. பெரியசாமி பொய்யாக வழக்குபோட்டு அவர் மேல் வெடிமருந்து வழக்கு இருப்பதாக கூறினார். குவாரியில் இருந்து கற்களை லாரியில் எடுத்து கொண்டுவராங்க அது எல்லாம் கிராம சாலைகள், அந்த கிராம சாலைகளில் 10டன் எடை மட்டுமே கொண்டு செல்ல முடியும். தெளிவா சுப்ரீம் கோர்ட் நீதிமன்ற ரிட் பெட்டிசன் எண். 136/2023 ல் சொல்லியிருக்காங்க நீதிமன்ற அவமதிப்பு வழக்கில்

உச்சநீதிமன்றம் வழக்கு 23, 26.07.2023 மத்திய அரசின் சாலை போக்குவரத்து அமைச்சர் கொடுத்து தமிழ்நாட்டின் எல்லா துறைக்கும் அனுப்பியுள்ளதாக கூறினார். என்னவென்றால் சாலைகளில் அதிகப்படியான எடை கொண்ட பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்களின் மீது உடனடியாக மோட்டார் வாகன சட்டம் விதி எண் 113(3), 114, 194ல் வழக்கு போட வேண்டும். அது மட்டும் அல்லாது பொது சொத்துக்கள் சேதாரம் என்ற வழக்கில் போட வேண்டும் என்று கூறினார். அதே மாவட்டத்தில் DRO சார் அஞ்சங்கவுண்டம்பட்டியில் கூலி விவசாயி அவர்களின் 6 வயது குழந்தைக்கு சர்க்கரை நோய் வந்ததாகவும், அவர் வீட்டை சுற்றி 6 குவாரிகள், 2 கிரசர், 2 எம்.சேண்ட் இருக்கு ஆனால் அவர் எந்த பாதிப்பும் இல்லைன்னு சொல்வதாக கூறினார். 6 வயது குழந்தைக்கு சர்க்கரை நோய் வந்தால் அடுத்து மலட்டுத்தன்மை வரும். அவரு குவாரிகாரரா இருக்கலாம், மற்ற ஆதரிப்பவர்களாக இருக்கட்டும் நான் இதை ஆதாரத்துடன் கூறுகிறேன் என்று, ஒன்றிய அரசின் CBSC எல்லா பள்ளிகளிலும் சுகர்கோட் போர்டுவைக்க சொல்லியிருக்காங்க, இந்த குவாரியினால இவ்வளவு பாதிப்பு இருக்கும் போது இந்த குவாரிகளுக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்றார்

இந்த குவாரி அனுமதி கோரியிருப்பது 3.45 ஹெக்டேர் இதனுடைய கிளஸ்டர் என்று சொல்வது அமராவதி குவாரி, நியூ புளு ஸ்டார் குவாரி இந்த குவாரி மொத்தம் 7,91 ஹெக்டர் சொல்லியிருக்காங்க ஆனா இவங்க கொடுத்துள்ள புத்தகத்துல பார்த்தா 2022-23 இயங்கி வந்து ஈஐஏ அறிக்கையின்பக்.எண். 155, 156ல் இயங்கி முடித்த மூன்றாண்டு காலத்துக்குள் உள்ள குவாரி கிளஸ்டர் அமாராவதி, ஜீவானந்தம், மல்லிகா 2022-7, 2022-8 மாத முடிந்துள்ளதாக கூறியிருப்பதாகவும், ஆனா அதை கிளஸ்டரில் கொண்டு வராம இருப்பது சரியில்லை என்று கூறினார். இந்த கருத்துக் கணிப்பு கூட்டம் எதுக்குன்னா சில விபரங்கள் விடுபட்டுள்ளன. அதை சேர்த்து, ஆனால் கிரிட்டீரியhவின் மாற்ற முடியாது உயர்மின் கம்பம் 235 மீ இருக்குனா, 200மீ போர் இருக்கு என்றால் அதை மாத்த முடியாது. 10 மீ தொழிற்சாலை இருப்பது, 60 மீ வீடு இருக்கு என்றால் இதை மாற்ற முடியாது. தொழில் முனைவோருக்கான கையேடுன்னு மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டுள்ள 1996 புத்தகத்தில் பக்.எண். 168, 169 சுற்றுச் சூழல் நிர்வாக பிரிவு பற்றிய விவரங்களை எனது அறிவுக்கு எட்டிய

வகையிலும், நான் நன்கு அறிந்தவகையிலும் மேற்காணும் புள்ளி விவரங்கள், தகவல்கள் உண்மை என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

அளிக்கப்பட்டுள்ள தகவல்கள், புள்ளி விவரங்களில் எவையேனும் எந்த ஒரு பகுதி பொய்யானதாக அல்லது தவறானதாக வழிகாட்டலில் அது தெரியவந்தால் திட்டம் நிராகரிக்கப்படும் என்றும், திட்டத்திற்கு அனுமதி ஏதேனும் வழங்கப்பட்டிருந்தாலும், அது நிறுவனத்தை சேர்ந்த / எங்கள் சொந்த செலவிலும் பொருப்பிலும் திரும்ப பெறப்படும் என்பதை நான் நன்கு அறிவேன் என்று கூறி தங்களுக்கும் கொடுத்துள்ளார், SEIAA – விற்கும் கொடுத்துள்ளார். இந்த அடிப்படையில் பல குவாரிகள், தார் பிளாண்டுகள் திருப்பூர் மாவட்டத்தில் மூடப்படும், அனுமதி கொடுத்து SEIAA கொடுத்து, CTO கொடுத்து, RCO கொடுத்து அவை மூடப்பட்ட பல குவாரிகள் தங்களுக்கும் தெரியும் என்று கூறினார். பணம் கொடுத்தால் குவாரிக்கு எந்தவித விதிவிலக்கும் இன்றி அனுமதி கொடுத்து விடுவதாக சொல்கிறார்கள் என்றும் இவற்றிற்கு நாங்கள் போராட்டம் செய்து மதிப்பிற்குரிய உயர் அதிகாரி செந்தில் சார் உட்பட 2 மணி நேரம் பேசியதாக கூறினார். அப்போ இந்த குவாரியை பொருத்தவரை நிறைய விதிமீறல்கள் இருப்பதாக சொல்கிறார்கள். கிராம நிர்வாக அதிகாரி அனுமதி கொடுத்தது ஆறாவது மாதம், SEIAAஅனுமதி கொடுத்தது ஏழாவது மாதம் அதாவது 16.07.2023 தேதியில் ஆனால் இவர்கள் ஆய்வு செய்தது மார்ச் 1 முதல் மே 31 VAO கடிதம், சான்றுவாங்குவற்கு முன்பே, அனைத்து துறையினரிடமும் கடிதம் பெறுவதற்கு முன்பே ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக கூறினார். எனவே, இது சட்டவிதி மீறல் என்றும், SEIAAஅனுமதி பெறுவதற்கு முன்பே ஆய்வு செய்யப்பட்டார் குவாரிதாரர் SEIAA–வைவிட மேலானவரா என்று கேட்டார்.

இதுபோன்ற குறைகள் வருங்காலங்களில் நிகழாமல் இருக்க கேட்டுக் கொண்டார். இந்த குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது என தெரிவித்தhர். மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் ஏற்கனவே, உச்சநீதிமன்றம் தெரிவித்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு போடப்பட்ட அனைத்து குவாரிகளையும் ஆய்வு செய்தhல். தமிழ்நாட்டின் கடன்களை அடைக்க உதவியாக இருக்கும், அதற்கான கடமை அவருக்கு உள்ளது என்றும், 335 குவாரிகளையும் ஆய்வு செய்யும் படியும், வெடி

மருந்துகள் எவ்வாறு இங்கு வந்தன என்பதைப் பற்றியும், சாலைகளில் எடுத்துச் செல்லப்பட்ட கனிமங்களை கரூர் மாவட்டத்தில் 1500 கோடி மதிப்புள்ள சாலைகள் இருப்பதாகவும் 2 டோல்கேட் (மாயனூர் மற்றும் அரவன்குறிச்சி) உள்ளது. இவற்றில் எடை மெசின்வைக்க வேண்டும் என்று வழக்குபோட்டு எடை மெசின் வைக்கப்பட்டுள்ளதாகவும், டோல்கேட்டின் வரியை மட்டும் உயர்த்துவதாகவும், எடையினை அளவீடு செய்யப்படுவது இல்லை, அவற்றை அளவீடு செய்ய கோர வேண்டும் என்றும், சமுதாய சொத்தை பாதுகாக்க வேண்டிய கடமை எல்லாருக்கும் இருப்பதாகவும், இந்த பகுதியில் இனிமேலும் கல்குவாரி அமைந்தால் சுடுகாடாக மாறிவிடும் என்றும், நிலத்தட்டு, பாறையின் அடுக்கின் பேலன்ஸ் இல்லாமல் இருப்பதாகவும், ஒரு அதிர்வு வந்தால் இந்த பகுதி முழுவதும் அழிந்துவிடும் குவாரிகாரராக இருந்தாலும், யாராக இருந்தாலும் அழித்துவிடும் எனவே, இந்த குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டாம் எனவும், இந்த பூமிஅனைவருக்குமானது, எனவே அதனை பாதுகாக்க வேண்டியது நாம் தான் என்று கூறினார்.

10. **திருமதி. கோ. ராணி, க/பெ. கோபால், பவித்திரம்.**

குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என கூறினார் – மனுவும் அளித்தார்.

11. **திரு. இரா. கார்த்தி, த/பெ. இராமகிருஷ்ணன், விழுப்புரம்.**

இந்த குவாரி பொது மக்களுக்கு எந்தவித இடையூறும் இன்றி செயல்படுமாறு கூறி, இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கூறினார்.

12. **திரு. மு. தங்கராஜ், த/பெ. முத்துசாமி, ஆண்டிப்பட்டி**

மகாகணபதி குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என தொவித்தார் – மனுவும் கொடுத்தார்.

13. **திரு. க. மணிவேல், த/பெ. கருப்பணகவுண்டர், ஆண்டிப்பட்டி**

மகாகணபதி புளூ மெட்டல்ஸ்க்கு அனுமதி கொடுக்கலாம் என கூறினார் – மனு கொடுத்தார்.

14. **திரு.து. மனோஜ்குமார், த/பெ. துரைசாமி, காருடையாம்பாளையம்**

மகாகணபதி புளூ மெட்டல்ஸ்க்கு அனுமதி அளிக்கலாம் என கூறினார்.

15. **திரு. கு பழனி, த/பெ. குப்பன், பள்ளமருதபட்டி**

குவாரிக்கு அனுமதி தரலாம் என கூறினார்

16. **<u>திரு. மா. வெங்கடேஷ், த/பெ. மாரிமுத்து, பவித்திரம்.</u>**

கல் குவாரிக்கு அனுமதி கொடுக்கலாம் என கூறினார்.

17. **<u>திரு. பா. சம்பத், த/பெ. பாலசுப்ரமணி, அகில இந்திய பார்வேர்டு கட்சியின் கரூர் மாவட்ட செயலாளர்.</u>**

மகாகணபதி புளூ மெட்டல்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கினால் அந்த சுற்று வட்டார பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு வேலை வாய்ப்பும் , பல நல திட்ட உதவிகளும் அந்த ஏரியாவில் உள்ள மக்களுக்கு நன்மை அடையச் செய்ய வேண்டும் என்றும், கட்டுமான பொருட்களையும் தங்கு தடையின்றி வழங்கி இந்த நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கி பேருதவி செய்யுமாறும், இன்று ஆற்றுமணல் தமிழகம் எங்கும் தடை செய்யப்பட்டு எங்குமே கிடைக்காமல் பல அவஸ்தைகளுக்கு உள்ளாகிக்கொண்டு இருப்பதாகவும், உள்வட்ட நிறுவனங்களுக்கு எல்லாம் அனுமதி வழங்காமல் காலதாமதம் செய்தாலுமே, பொதுமக்களுக்கு கட்டுமான பொருட்கள் மற்றும் அரசு செய்யக்கூடிய பல கட்டிட தொழில்களுக்கும் மணல், கற்கள் போன்றவற்றை தாமதமாக கிடைக்கப்பெற்று பல பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்றும், எனவே இது போன்ற புளூ மெட்டல்ஸ் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கி பொதுமக்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் இருக்க ஆவன செய்யுமாறும், மகாகணபதி புளூ மெட்டல்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி வழங்குமாறு அகில இந்திய பார்வேர்டு கட்சியின் சார்பாக கேட்டுக் கொண்டார்.

18. **<u>திரு. பா. குணசேகரன். எஸ். வெள்ளாளப்பட்டி, கரூர், சாமான்ய மக்கள் கட்சி.</u>**

சிறு கனிம சலுகை விதிகளில் ஒரு கல் குவாரி அமைவதற்கான அமைவிடம் பகுதிகள் குறித்து சிறு கனிம சலுகை விதியில் தெளிவாக வரையறுத்துள்ளது. ஆனால் இந்த கல்குவாரியின் அமைவிடத்திலிருந்து 300 மீ சுற்றளவில் எந்தவித கட்டுமானமும் இல்லை என்று ஒரு சான்று குப்பம் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் கொடுத்திருக்கிறார் என்றும், ஆனால் தாங்கள் இன்று காலையிலே தமிழ் நிலம் என்ற ஒரு இணையதளத்திலே போயி இந்த சர்வே எண்ணை பார்த்தபோதும், அதேபோல கூகுள் புகைப்பட வழியாக பார்த்தபோது ஏற்கனவே, தோழர் முகிலன் சுட்டிக் காட்டியது போல இந்த கல்குவாரி அமைவிடத்திற்கு வடமேற்கு பகுதியிலே 235 மீ–ல் உயர் அழுத்த மின் கோபுரம் செல்கிறது. அது வடகிழக்கு திசையிலிருந்து தென்

மேற்கு திசையை நோக்கி இந்த கல்குவாரி அமைவிட பகுதியில் இருந்து வடமேற்கு பகுதியில் 235மீ செல்கிறது. அதுமட்டும் அல்லாமல் அதே வட மேற்கு திசையிலே 35 மீ–ல் பாசன கால்வாய் கட்டுமானம் இருக்கிறது. இந்த நொய்யல் பாசன கால்வாய் என்பது மண்மங்கலம் வட்டத்தில் உள்ள 12 கிராமங்களுக்கும், பாசன நீரை தரக்கூடிய ஒரு கால்வாய், அதேபோல புகளூர் வட்டத்தில் இருக்கக்கூடிய தென்நிலை மேற்கு கிராமத்தில் இருந்து வளையபாளையம், அத்திப்பாளையம், முன்னூர், துக்காச்சி அந்த கிராமத்தின் வழியாக கடைசியில் காவிரி ஆற்றில் நெரூர் கிராமத்தில் போய் சென்று கலக்கக்கூடிய வகையிலே செயற்கையாக உருவாக்கப்பட்ட சிமெண்ட் தளம் அமைத்து உருவாக்கப்பட்ட கால்வாய் இந்த குவாரி அமைவிட புலத்திலிருந்து 35மீ தூரத்திலே வெகு அருகாமையில் அமைந்துள்ளது. அதுமட்டுமல்ல அந்த கால்வாயின் மேல் பகுதியிலே கிட்டதட்ட 30 அடி அகலத்திலே 25 அடி நீளத்திலே ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுமானங்கள் எல்லாம் அரசு நிரந்தரமாக ஏற்படுத்திய கட்டுமானம். இந்த கட்டுமானத்திற்கு ஊறு விளைவித்தால், வாய்க்கால் சிதிலம் அடைந்தால், அந்த வாய்க்காலில் செல்லக்கூடிய தண்ணீர் கசிவு ஏற்பட்டு கடைமடை பகுதிவரை சென்று, விவசாய நிலங்களுக்கு அந்த தண்ணீர் போய் சேர முடியாத நிலை ஏற்படும்.

அதேபோல இந்த கல்குவாரி தொடங்கப்பட்டு வெடிமருந்துகள் வெடித்து கல்குவாரி கனிமங்கள் வெட்டியெடுக்கப்படும் போது ஏற்படக்கூடிய அதிர்வுகள் அந்த 50மீ தொலைவுக்குள் அமைக்கப்பட்டுள்ள பாலம் பாதிப்பு ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. பொதுவாக இந்த 300 மீ கிரிட்டீரியா என்பது இதை அதிகப்படுத்த வேண்டும் என்று தான் எங்களை போன்ற சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கேட்டுக்கொள்வது, சுமார் 1 கிமீ அளவுக்கு இந்த கிரிட்டீரியாவை அதிகப்படுத்த வேண்டும். ஆனால் இந்த அரசு 300 மீ மட்டுமே வைத்துள்ளது. பொதுவாக நமது பகுதியில் இருக்கக்கூடிய கல்குவாரிகளில் கனிமம் வெட்டியெடுப்பவர்கள் வைக்கின்ற வெடி 1 கிமீ சுற்றளவுக்கு இருக்கக்கூடிய வீடுகளை எல்லாம் விரிசல் விடக்கூடிய அளவுக்கு மிக பெரிய அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடியது. இன்றைக்கு பரமத்தி யூனியன் பகுதிகளில் பார்த்தால் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி

83000 பேர் மக்கள் தொகை, இப்போதுகிட்டத்தட்ட 110000 மேற்பட்ட மக்கள் வசிக்கக்கூடிய ஒரு பகுதியாக இந்த பரமத்தி ஒன்றிய பகுதி இருக்கிறது.

இந்த பரமத்தி ஒன்றிய பகுதியிலே பல நூறு கல்குவாரிகள் கடந்த காலங்களில் வெட்டியெடுக்கப்பட்டு அனுமதி முடிந்துவிட்டன. அதேபோன்று இயங்கிகொண்டுள்ள குவாரிகள் கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட குவாரிகள் வந்து பரமத்தி ஒன்றிய பகுதியிலே மட்டுமே செயல்பட்டுவருகின்றன. அனுமதி இல்லாமல் சட்ட விரோதமாக அனுமதி காலம் முடிந்தும் பல கல்குவாரிகள் செயல்படுகின்றன. இத்தனை குவாரிகளில் பார்த்தால் முன்னூர், அத்திபாளையம், குப்பம், காருடையாம்பாளையம், பவித்திரம், புன்னம் அதுபோன்ற நெடுக்கூர் இந்தபக்கம் பரமத்தி போன்ற் பல கிராமங்கள் வந்து இருக்கக்கூடிய வீடுகள் விரிசல் விட்டு பொதுமக்க்ள் அச்சத்துடன் வாழக்கூடிய நிலையில் இருக்கிறது, ஆக இந்த அடிப்படையில் பார்க்கும்போது இந்த கல்குவாரிக்கு அனுமதி கொடுக்கும் பட்சத்தில் இந்த கல்குவாரியில் கனிமம் எடுக்கப்படும் போது ஏற்படக்கூடிய அந்த வெடிமருந்து அதிர்வுகளிள் இந்த உயர் மின் அழுத்த மின் கோபுரம் கடுமையாக பாதிக்கப்படும் நொய்யல் பாசன வாய்க்கால் சேதமடைய வாய்ப்பு உள்ளது. அந்த பாலம் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

அதுமட்டுமல்லாமல் இந்த குவாரி அமைவிடத்தின் வடகிழக்கு பகுதியிலேயே ஒரு பப்ளிக்ரோடு என்று சொல்லக்கூடிய பொது தார் சாலை அமைந்துள்ளது. அந்த சாலையில் போக்குவரத்து இருக்கக்கூடிய ஒருசாலை அதில் வந்து கல்குவாரிக்கு கனிமம் ஏற்றிச் செல்லக்கூடிய வாகனங்கள் செல்லும் வாகனங்கள் அந்த பொது பாதை வழியாக ஆடுமாடுகளை ஓட்டிச் செல்லக்கூடிய விவசாயிகள் கால்நடை மேய்ப்பவர்கள். இப்படி பொதுமக்கள், பள்ளி குழந்தைகள், கல்லூரி மாணவர்கள் என அத்தனை பேரும் பயன்படுத்தக் கூடிய ஒரு தார்சாலை அந்த சாலைக்கு 10மீ கூட இடைவெளிவிடாமல் இந்த கல்குவாரி அமைக்கப்பட இருக்கிறது. அப்படி அமையும் பட்சத்தில் அங்கே வெடி வெடிக்கும் போதுஅந்த கற்கள் அந்த சாலையில் செல்லக்கூடிய பொதுமக்கள் மேல் விழுந்து உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய நிலை உருவாகும் ஆக இது தமிழ்நாடு சிறு கனிம சலுவை விதியின் அடிப்படை வரைமுறைகளுக்கு முரணாக இந்த கல்குவாரி அமைய இருக்கிறது. அதனால் இந்த

கல்குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்று முதலில் சொல்கிறேன் என்று கூறினார்.

இது இந்த கிரிட்டீரியாவுக்கு முரணாக இருக்கிறது. அதையும் மீறி கடந்த காலங்களிலே என்டீசி என்ற ஒரு கல்குவாரிக்கு இதே முருகன் மஹாலில்தான் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது, அங்கே அரவக்குறிச்சி, மற்றும் பள்ளமருதபட்டிக்கு செல்லக்கூடிய அந்த பம்பிங் ஸ்டேசன் (நீரேற்றும் நிலையம்) அதில் இருந்து 50மீ தொலைவுக்குள்ளே அந்த என்டீசி கல்குவாரிக்கு 50மீ தொலைவிலேயே நீரேற்றும் நிலையம், பைப்லைன் இருந்தது. அதை நாங்கள் சுட்டிகாட்டி எதிர்ப்பு தெரிவித்த பிறகும் அந்த என்டீசி கல்குவாரிக்கு அன்றைக்கு இருந்த அதிகாரிகள் SEIAA குழு உள்ளவர்கள் எல்லாம் சட்டவிரோதமாக எங்களுடைய ஆட்சேபனைகளை மறைத்துவிட்டு, அதில் பிரதிபலன் அடைந்துகொண்டு அந்த கல்குவாரிக்கு அனுமதி கொடுத்தார்கள். பின்னிட்டுநாங்கள் உயர்நீதிமன்றம் செல்கிறோம் என அதற்குண்டான நடவடிக்கைகள் எடுத்து அந்த கல்குவாரிக்கான குத்தகை உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்பட்ட வரலாறு இந்த ஊரில் நடைபெற்றுள்ளது. அதனால் அந்த வரலாறை, நினைவுகூர்ந்து அதிகாரிகள் இப்படிபட்ட ஒரு முறைகேடான இந்த கல்குவாரி திட்டத்திற்கு அனுமதி கொடுக்கக்கூடாது. எனினும் அதை மீறி கொடுத்தார்கள் என்றால் சட்ட நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், இது தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதியை வைலேட் பண்ணக்கூடிய ஒரு Project அதனால் இதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது.

இரண்டாவதாக இந்த பரமத்தி யூனியன் பகுதிகளில் கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி, புகளூர் வட்டம், மண்மங்கலம் வட்டம், அதேபோல் கடவூர்வட்டம், குளித்தலை வட்டம், இப்படி எல்லாப் பகுதிகளிலுமே கல்குவாரிகள் நிறைய அமைக்கப்பட்டு கடந்த காலங்களிலே கனிம கொள்ளை அபரிவிதமா நடந்த காரணத்தினால் கரூர் மாவட்டமே மழைபொழிவு கடந்த 10 ஆண்டுகளாக படிப்படியாக குறைந்துவந்து இந்த ஆண்டு பரமத்தி சுற்றுவட்டார பகுதியில் சராசரி அளவைவிட 50 சதவிகிதம் குறைவான அளவுக்கு மழைபொழிவு ஏற்பட்டுள்ளது. கரூர் மாவட்டமே அந்த அளவிற்க்கு தான் இருக்கிறது. அதிலும் இந்த அரவக்குறிச்சி, பரமத்தி இந்த பகுதியில் பார்த்தால் இந்த வருடம் மழையே இல்லை. அது காலம் கடந்த மழை

எதிர்பார்ப்பின் போது மழைபெய்யாமல் அருவடை நேரத்தில் மழை பெய்யக்கூடிய நிலை. இப்போதுதான் புல் தழைத்துள்ளது.

ஆறு மாதத்திற்கு முன் செப்டம்பரில் மழை பெய்ய வேண்டியது நவம்பர், டிசம்பர்–ல் புல் முளைக்கிற அளவுக்குதான் மழை பெய்துள்ளது. அப்போ வந்து இந்த பகுதியில் கால்நடை வளர்க்கக்கூடியவர்கள், இந்த நிலத்தடி நீரை நம்பி, மானாவாரி புல் தரையை நம்பி கால்நடைகளை வளர்த்துவருகிறார்கள். அந்த நிலத்தடி நீரை வைத்துதான் சிறிய கிணறு, போர் ஆகியவற்றை நம்பிதான் இருக்கிறார்கள். குடிநீர் குடிக்ககூடிய நிலை, போர் நம்பிதான் இருக்கிறார்கள். ஆனால் இந்த குவாரி திட்டத்தில் திரையில் காண்பிக்கும்போது பார்த்தால் 62மீ ஆழத்தில் வந்து இந்த கல்குவாரிய அமைய இருக்கிறது. கனிமம் வெட்டி எடுப்பதற்கான பொhட்டன்சியல் மினரல் இருக்கு 62மீ அப்படின்னு சொல்கிறது, கிட்டத்தட்ட 200 அடி ஆழம், அது மட்டும் இல்லாமல் 19,80,000Cum கனமீட்டர் கனிமங்கள் வெட்டி எடுப்பதற்கான பெட்டன்சியல் இருக்கக்கூடியகனிமங்கள் வெட்டி எடுப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்று திட்ட அறிக்கையில் சொல்லப்பட்டு உள்ளது.

ஆனால் இந்த 5 ஆண்டு குத்தகையில் வந்து 7,20,000 Cumமட்டுமே தான் நாங்கள் வெட்டி எடுப்போம் என்று கூறியிருக்கிறார்கள். இந்த 7,20,000 Cum வெட்டி எடுக்கப்படும்போது கிட்டதட்ட 30மீ ஆழம் வெட்டப்படும். 30மீ–க்கு மேல்தான் செல்லும் 62மீ–க்கு அனுமதி வாங்கப்போராங்க, குடுக்கப்போராங்க அப்போ பார்த்தால் 200 அடி ஆழத்தில் கல்குவாரி கனிமங்கள் வெட்டி எடுக்கும் பட்சத்தில் இந்த குப்பம் கிராமத்தை ஏற்கனவே பல குவாரிகள் சட்டவிரோத குவாரிகள், அனுமதி பெற்று சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டியெடுத்து இந்த குப்பம் கிராமமே நிலத்தடி நீர் மட்டம் குறைந்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த பரமத்தி யூனியன் பாதிக்கப்பட்டுள்ளது. குப்பம் கிராமம் தான் தலையானது அந்த பாதிப்பில் முன்நிலையில் இருப்பது இந்த குப்பம் கிராமம்தான். இந்த கிராமத்தில் தற்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ள புலத்தில் குவாரி அமையவுள்ள இடத்திற்கு கிழக்கில் ஒரு கல் குவாரி கனிமம் வெட்டியெடுத்து அதில் பெரிய குட்டையாக தண்ணீர் தேங்கியிருப்பதை GPS புகைப்படத்தில் பார்க்க முடிகிறது. அதேபோல் மேல்புறத்தில் ஒரு கல்குவாரி இருக்கிறது. தென்புறத்தில் ஒரு கிரஷர் இருக்கிறது. இப்போது

சுற்றிலும் ஏற்கனவே கல்குவாரிகள் வெட்டயெடுக்கப்பட்டு அந்த பகுதியே ஒரு அணுகுண்டு சோதனை நடந்த மாதிரி குழியும் குண்டுமாக இருக்கிறது.

அப்படிப்பட்ட ஒரு நிலை GPS Map –ல் பார்த்தால் தெரிகிறது ஆக இதற்கு அனுமதி வழங்கும் பட்சத்தில் இந்த பகுதியில் சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கிறது. இந்த திட்ட அறிக்கை என்ன சொல்கிறது என்றால் 15கிமீ சுற்றளவில் எந்த தொல்லியல் சின்னங்களும் அமையவில்லை என்று, ஒரு பாய்ண்ட் Project Report–ல் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இங்கு இருக்கக்கூடிய புகழிமலை நமது வருவாய் அலுவலர் அவர்களுக்கு தெரியும், மாசு கட்டுப்பாடு அதிகாரிகளுக்கும் தெரியும், புகழிமலை இங்கிருந்து 10 கிமீ தூரம் கூட இருக்காது.

இப்படி நொய்யல், மரப்பாளையம் போய் சுற்றிபோனால் ஒரு 13 கிமீ, 14 கிமீ வரும் இங்கிருந்து GPS Map –ல் கோடுபோட்டு பார்த்தால் 10 கிமீ கூட இல்லை, அப்படிபட்ட புகழி மலை அது கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலே கிராமி கல்வெட்டுகள் பொரிக்கப்பட்ட ஒரு தொல்லியல் சின்னம் கொண்ட ஒரு நினைவிடம், அங்கு சமணர் படுகை உள்ளது. அங்கு பத்துப்பாட்டிலே பாடப்பெற்ற சேர மன்னர்களை பற்றிய கிராமி கல்வெட்டு எழுத்துக்கள் இருக்கின்றன. சேரலாதன் கலிங்கம் என்ற மன்னன் சொல்லி அடித்த பாலி அப்படின்னு பிறாமி கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. அது தமிழ்நாடு தொல்லியல்துறை பாதுகாப்பாக பராமரித்து வரக்கூடிய ஒரு தொல்லியல் சின்னம். இந்ததொல்லியல் சின்னத்திற்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் இருக்கு. ஏற்கனவே அந்த பகுதி சிதைந்து போய்தான் இருக்கு, இன்னும் இதுபோன்றெல்லாம் இருந்தால் அதற்க்கு இன்னும் பாதிப்பு அதிகம் ஆகும். அதேபோல் பார்த்தால் ஒரு திட்ட அறிக்கையில் 10கிமீ –க்கு எந்த மலைகளும் இல்லை என்று சொன்னார். இங்கு மரகதீஸ்வரர் மலை பக்கத்தில் தான் உள்ளது.

அதேபோல் பார்த்தால் இந்த திட்ட அறிக்கையில் 10 கிமீ–ல் எந்த ஒரு மலையும் இல்லை என்று சொல்கிறார். இங்கு 800 அடி மரகததீஷ்வர் மலை இங்கு தான் உள்ளது. 2, 3 கிமீ தான் இருக்கும். பால மலை இங்கிருந்து 10கிமீ தாண்டி உள்ளது. பாலமலை ஒரு மலை அங்கு முருகன்கோவில் இருக்கு அந்த கோவிலை சுற்றி இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான இடம் உள்ளது. அந்த கோவில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமானது. அதே போல் மரகதீஷ்வர் கோவிலும்

இந்து சமய அரநிலைத்துறைக்கு சொந்தமான ஒரு திருக்கோயில் லிஸ்டேட் டெம்பில் அப்படிப்பட்ட புனித தளங்கள் இருக்கக்கூடிய ஒருபகுதி மலைகள் இருக்கக்கூடிய பகுதி இந்த பக்கம் நொய்யல் ஆறு ஓடுகிறது. அந்த பக்கம் காவேரி ஆறு ஓடுகிறது, இந்த பக்கம் அமராவதி ஆறு ஓடுகிறது. எல்லாமே 15கிமீ சுற்றளவில் இருக்கக்கூடிய சுற்றுச் சூழல், பல்லுயிர் சூழல் இருக்கக்கூடிய பகுதி, இந்த பகுதி, இந்த பகுதியினுடைய சுற்றுச்சூழல் ஏதாவது ஒரு இடத்தில் பாதிக்கப்பட்டாலும் அதனுடைய பல்லுயிர் சூழல் என்பது அது ஒரு செயின், உணவு சங்கிலி, அந்த பல்லுயிர் வாழக்கூடிய பகுதியில் இருக்கக்கூடிய உணவு சங்கிலியை மிக மோசமான இந்த கனிமம் வெட்டி எடுக்கக்கூடிய இந்த திட்டத்தினால் பாதிப்பு ஏற்படும் அதனால் வரும் காலங்களில் பரமத்தி ஒன்றிய பகுதிகளில், அரவக்குறிச்சி ஒன்றிய பகுதி, புகளூர் வட்ட பகுதி இதில் எதிலும் கல் குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது, போதும், இத்தனை வருடங்கள் வெட்டியெடுத்து சம்பாரித்தது போதும், இந்த அரசுக்கு கட்டுன ராயல்டி போதும் இந்த மக்களுக்கு கொடுத்த வேலைவாய்ப்பு போதும் நீங்க ஏற்கனவே இந்த மகாகணபதி புளூ மெட்டல்ஸ் உடைய உரிமையாளர் பவித்திரம் கிராமத்தில் ஒரு கல்குவாரி வைத்திருந்தார்.

கணேஷ் முருகன் காருடையாம்பாளையம் கிராமத்தில் ஒரு கல்குவாரி வைத்திருந்தார். மகாஸ்ரீ இரண்டு கல்குவாரியும் ரோட்டுக்கு இந்த பக்கம் ஒன்று, அந்த பக்கம் ஒன்று, நடுவுல ரோடு, அது கிராமம் வேறு, வேற அங்கு போய் பார்த்தால் எத்தனை மரம் நடப்பட்டுள்ளது. இப்போ வந்து 1 ஏக்கருக்கு 200 மரம் என்று திட்ட அறிக்கையில் சொல்றாங்க 1650 மரம் 8 ஏக்கருக்கு நடபோகிறார்களாம், அங்க ஏற்கனவே எத்தனை மரம் நட்டு வெச்சிருக்காங்க, அந்த மரத்தினால் சுற்றுச் சூழலுக்கு என்ன வந்திருக்கு ஒன்றுமே இல்லை, அந்த பகுதியில் மாலப்பாளையம் புதூர் இருந்து, அந்த ஒரு ஊர் போர வழியில் இருக்கக்கூடிய அந்த வழியில் எல்லாருமே வெடிய போட்டு கல் விழுந்து, இந்த ஊரே நாசமாக போச்சினு திட்டாத சாமானிய மக்களே கிடையாது, அதையும் பார்த்தால் ஒரு குவாரி அனுமதி காலம் முடிந்த பிறகு, இந்த ஒரு குவாரியின் லைசென்சை வைத்து கொண்டு அனுமதி முடிந்த கல்குவாரியில் சட்ட விரோதமா கனிமங்ளை வெட்டி எடுத்துருவார்கள், தான் 2021ல் ஒரு தோழர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு போட்டு இங்கு இருக்கக்கூடிய

அத்தனை செயல்பாட்டில் இருக்கக்கூடிய குவாரிகள், லைசென்ஸ் முடிந்த குவாரிகள் அத்தனையும் டிஜிட்டல் சர்வே செய்து அதில் கனிமங்களை முறைகேடாக எடுப்பதாக தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிப்படி 15 மடங்கு அபராதம் விதிக்கனும், அது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கனும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவு போடப்பட்டுள்ளது. ஆனால் பிரபு சங்கர் ஆட்சியாளராக இருக்கும் போது ஒரு சில 20-30 குவாரிகளை மட்டும் ஆய்வு செய்து, அவர்களுக்கு பரவலாக ஒரு பைன் போட்டுவிட்டு சென்றார். இந்த பைனை கணக்கிடுவதில் தமிழ்நாடு அரசு இந்த சினரேஜ் கட்டணத்தை ஒரு யூனிட்டுக்கு வந்து சிறுகனிம சலுவை விதிப்படி இருந்ததை மூன்று மடங்கு குறைத்து பிக்ஸ் பண்ணிட்டாங்க, அதிலும் முறைகேடு அரசே இப்படி பண்ணும்போது இந்த கனிமங்களை கொள்ளையடிப்பவர் துணையாக செல்லக்கூடிய நிலை இருப்பது இந்த சுற்றுச் சூழல் எதிர்கால தலைமுறையினர் கடுமையாக பாதிக்கப்படும். இதுவந்து ஒரு சமூக அக்கரையில் தான் சொல்றோம்.

எனவே சுற்றுச்சூழல் பாதிப்பு என்பது ஐயாவுக்கு தெரியும், ஜெனிவோவில் ஒரு ஸ்டாக் கோம் கன்வர்கள் வந்து ஒரு நாடே பிரைமினிஷ்டர் தலைமையில் ஒரு கன்வன்சன் நடக்குது அந்த கன்வன்சன் என்ன சொல்றாங்கன்னா அதாவது எதிர்கால தலைமுறையினர் தங்களுடைய வாழ்க்கை வாழும்போது அதில் இருக்கக்கூடிய இந்த சுற்றுச் சூழல்தான் வளங்கள். எதிர்கால தலைமுறையினர் அவர்களுடைய வாழ்க்கை வாழும்போது இயற்கை வளங்களின் திறன்களை பாதிக்காத வகையில் வளர்ச்சி இருக்கனும் அந்த வளர்ச்சிதான் sustionable development சொல்லுராங்க தமிழில் நீடித்த வளர்ச்சி,அறிவற்ற வளர்ச்சி அப்பிடின்னு சொல்லுகிறோம், இங்க வந்து கனிமங்களை வெட்டியெடுத்து இந்த அழிவை இந்த சுற்றுச் சூழல் சீர்கேட்டை சமன் செய்ய முடியாது, இது ரீனபில் எனர்ஜி கிடையாது. ஒருமுறை எடுத்தால் அந்த பாதிப்புகள் வந்து இந்த பூமி இருக்கும் வரை இருக்கும். அதனால் இப்போ கம்யூனிஸ்ட் கட்சி காரர்கள் வந்து சொன்னார்கள், என்னா சொன்னாங்க இதை வைத்து தான் கட்டிடம் கட்ட முடியும், எம்-சேண்ட்,ஜல்லி இருந்தால்தான் கட்டுமான தொழில் வளரும் தொழிலாளர்களும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொன்னார்கள். ஒத்துக்கிறோம் ஆனால் இந்தோனேசியாவிலிருந்து, மலேசியாவிலிருந்து அந்த பூமத்திய ரேகை இருக்கிற

பகுதியில் வெப்பமண்டல காடுகளில் ஆண்டு முழுவதும் மழை பொழியும் போது அங்கிருக்கிற மலைகளில் வந்து வருட முழுவதும் வெள்ளங்கள் பெருக்கெடுத்து வந்து மணல் திட்டுகளை கடல் வரைக்கும் உருவாக்கிவைத்துள்ளது.

அவர்கள் மணல் திட்டுக்களை கடல் வரைக்கும் உருவாக்கிவைத்துள்ளது, அவர்கள் மணலை எடுத்து சென்று நடு கடலில் கொட்டுகின்றனர். அவர்கள் இந்த மணலை சும்மா வாங்கிக்கன்னு கையைபிடித்து மாலை போடுவது போல் தொங்கிகிட்டு இருக்கான். நமது தமிழ்நாடு அரசு எடப்பாடியார் ஆட்சிகாலத்தில் 2013ல் ஒரு அரசாணை போட்டாங்க ஒரு நாளைக்கு இத்தனை இலட்சம் யூனிட் மண்னை நாங்கள் இறக்குமதி பண்ணப்போறோம் என்று அந்த திட்டத்தை அரசு பரிசீலனைக்க வேண்டும். காவேரி ஆறு முடித்துவிட்டனர், அமராவதி ஆறு முடித்துவிட்டனர், நொய்யல் ஆறும், பாறையும் சீத்த முட்கள் தான் உள்ளன. மணலே இல்லை. இப்பவும் திருட்டு மணல் ஓட்டுகின்றனர். இப்பயாவது இந்த அரசு இந்த திராவிட மாடல் அரசு சமூக அக்கரை சுற்றுச் சூழல் அக்கரை எதிர்கால தலைமுறையினர் மீது அக்கரை இருந்தால் இந்த கல்குவாரிக்கு அனுமதி கொடுக்காமல், வெளிநாட்டில் இருந்து மணலை இறக்குமதி செய்து கொடுக்கனும். அதனால்வந்து இந்த திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு மாசுகட்டுப்பாடு வாரியம், வருவாய் துறையினர் அனுமதி கொடுக்கக்கூடாது. கொடுக்கும் பட்சத்தில் இந்த சட்ட விதிமுறை மீரலை உயர்நீதிமன்றத்திற்கு எடுத்து சென்று உங்களுக்கு நிரந்தர தடை பெருவதற்க்கு நாங்கள் தயாராக உள்ளோம், அதற்கான எல்லா வழிவகைகளும் எங்களுக்கு தெரியும் என இந்த நேரத்தில் சொல்லி இந்த குப்பம் கிராமம் புல எண். 511/1, 511/2 மற்றும் 512/2 ஆகிய புலங்களில் அமைக்கப்பட இருக்கக்கூடிய கல்குவாரிக்கு அனுமதி தரக்கூடாது என கூறினார்.

**19. <u>திரு. ச.ரகுமான், த/பெ. சர்க்கரை, கரூர்.</u>**

கரூர் மாவட்டம், புகளூர் வட்டம் , குப்பம் கிராமம், புல எண். 511/1, 511/2 மற்றும் 512/2–ல்., திருவாளர்கள் மகாகணபதி புளூ மெட்டல், மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவருக்கும் தனது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

இந்த கல்குவாரி, ஏற்கனவே பல கல்குவாரிகள் பரமத்தி பகுதி, குப்பம் பகுதியில் அமைந்திருக்கிறது. ஏற்கனவே கல்குவாரியை சுற்றிதான் பல கல்குவாரிகள் அமைந்திருக்கிறது. அந்த குவாரிகள் அனைத்துமே அரசு விதிகளை பின்பற்றாமல் மரம் வைப்பது போன்ற எண்ணற்ற நிகழ்வுகள் நடக்காமல் மக்களுக்கு துன்புறுத்தும் நிலையில் தான் இருந்து வருகிறது. மறுபடியும் தோழர் சொன்னது போல இவர்களுக்கு இரண்டு குவாரிகள் ஏற்கனவே இருந்திருக்கு அந்த குவாரிகளும் சரியான விதிமுறைகளை, அரசு விதிகளின்படி நடத்தப்படவில்லை. மீண்டும் ஒரு குவாரி எதற்காக என ஒரு கேள்வி பொதுமக்களிடம் எழுந்துள்ளது. இங்குள்ள பகுதியில் மக்கள் ஆடு, மாடுகள், விவசாயம் செய்வார்கள், விவசாயம்தான் வாழ்வாதாரம். இங்கு கீழ்நிலை ஆற்றோர பகுதிகளில் கரூர், வாங்கல் போன்ற பகுதிகளில் ஆற்று தண்ணீரை எடுத்து விவசாயம் செய்வார்கள். இந்த பகுதியில் ஆடு, மாடு வளர்ப்புதொழில், விவசாய தொழில் நடைபெறுகிறது. மழை பெய்யும் போது வளரும் புற்களில் சிறு,சிறு கற்கள் மற்றும் மண் படிந்தால் எவ்வாறு மாடு மேய்க்க முடியும். ஆடுகள், மாடுகள் மேய்க்க முடியhது. இது போன்ற கல்குவாரிகள் ஏற்கனவே இருந்திருக்கு அதனால் மிக பாதிப்டைந்து மக்கள் விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்திருக்கிறார்கள்.

இந்த கல்குவாரிகளுக்கு அருகாமையில் மின் கோபுரம் உள்ளது. அதேபோல் தார்சாலைகள் உள்ளது. இந்த கல்குவாரிகளுக்கு அருகில் வீடுகள், மின்கோபுரங்கள், தார்சாலைகள், அமைந்துள்ளது. வாய்க்கால்கள் உள்ளன. இவற்றிற்கெல்லாம் தமிழ்நாடு சிறு கனிம விதிகள்படி அளவுகோல் இருக்கிறது. அந்த அளவுகோலை யாரும் பின்பற்றாமல் பொய்யான அறிக்கை கொடுத்து இந்த நிறுவனத்திற்கு ஆர்வமாக செயல்படுகின்றனர். ஆனால் இந்த பொய்யான தகவல்களை கல்குவாரிக்கு உரிமை அறிக்கை தயாரித்த குலோபல் நிறுனத்தை தடை செய்ய வேண்டும். இந்த குவாரிக்கு அனுமதி அளிக்கக் கூடாது என கூறினார்.

20. <u>திரு. கா.வேலுசாமி, த/பெ. காளியப்பன் குவாரியின் பக்கத்து காட்டுக்காரர். பவித்திரம்.</u>

குவாரிக்கு அனுமதி கொடுப்பதில் எந்தவிதமான பிரச்சனையும் இல்லை என்றும், இந்த குவாரியிலிருந்து எந்த ஒரு ஒலி மாசு ஏதும் ஏற்படாது என்றும், ஏன்னா

அவர்கள் மரங்களை வைத்துள்ளதால். எந்த ஒரு ஒலி மாசும் வராதுங்க, 100 சதவிகிதம் குவாரியினால் கிராம மக்களுக்கு எந்த பாதிப்பும் வராது, மறைமுகமாகவும், நேரடியாகவும் வேலைவாய்ப்பும் கிடைக்கிறதால 100 சதவிகிதம் அனுமதி கொடுக்கலாம் என்று கூறினார்.

21. **<u>திரு.வெ காளிமுத்து, த/பெ வெள்ளையன், கரூர்.</u>**

பக்கத்துல காவேரி ஆறு இருக்கு, நொய்யல் ஆறு இருக்கு, அது பக்கத்துல பார்த்தா அமராவதி ஆறு இருக்கு, ஆனா இங்க விவசாயம் படுமோசமா இருக்கு காரணம் என்னான்னா சுற்றிலும் ஏகப்பட்ட கல்குவாரியா இருக்கு, இது அரசு தடை செய்ய வேண்டும். விவசாயமே இல்லாத அளவுக்கு கல்குவாரிதான் முழுக்க முழுக்க காரணம். அது அதிகாரிகளுக்கு தெரியாதது ஒன்னும் இல்லை. அவர்கள் காரில் வருவதால் தெரியாது, 2 வீலர்களில் அந்தப்பக்கம் போகும் போது புழுதியா எப்படி பறக்கும்னு தெரியும், ஒரே புழுதியாதான் இருக்கு, மரம் நடுறெங்கரது பெயரவில்தான் சொல்றாங்க. ஆனா எந்த மரத்தையும் நடுவது இல்லை. இருக்கிற கல்குவாரியில அதிகாரிகள் போய் பார்த்தா தெரியும் மரங்கள் ஏதும் நடுவது இல்லன்னு. எனவே, இந்த மகாகணபதி புளூ மெட்டல்ஸ்க்கு அனுமதி தரக்கூடாது என்று கூறினார்.

22. **<u>திரு. ரா.தங்கவேலு, த/பெ. ராமசாமி, குந்தாணிபாளையம்.</u>**

எங்களது வாழ்வாதாரமே விவசாயம்தான். ஆனால் நொய்யல் ஆற்றுத் தண்ணி வந்ததுல இருந்து விவசாயமே இல்லைங்க. எங்களுக்கு கல்குவாரிதான் பிரதான தொழில். எனவே மகாகணபதி புளூ மெட்டல்ஸ்க்கு அனுமதி தரலாம். மக்களின் பாதுகாப்பு கருதி சுற்றிலும் கம்பிவேலி வைக்கப்பட்டுள்ளது, மரக்கன்றுகள் வைக்கப்பட்டுள்ளது. ஆக மகாகணபதி புளூ மெட்டல்ஸ்க்கு அனுமதி தரலாம் எனக் கூறினார்.

23. **<u>திரு. சு. சேகர், த/பெ. சொக்கு, பவித்திரம்</u>**

இந்த கல்குவாரியினால் ஊர் பொதுமக்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லை. அதனால் இந்த கல்குவாரிக்கு அனுமதி தரலாம் என கூறினார்.

24. **<u>திரு. பொ. பாஸ்கர், வள்ளகுளத்துப்பாளையம்.</u>**

கல்குவாரிக்கு அனுமதி தரலாம் என கூறினார்.

25. **திரு. மணி, மாநில துணை தலைவர் பாட்டாளி மக்கள் கட்சி.**

இந்த பகுதியிலே ஏகப்பட்ட கல்குவாரிகள் நடந்துக்கொண்டு இருக்கிறது. இருந்தாலும், இல்லீகலாக லைசென்சே இல்லாமல் நிறைய குவாரிகள் நடந்து கொண்டிருக்கிறது. இந்த பகுதியில நிறைய பொதுமக்கள் பாதிக்கப்பட்டு பல வகையிலும் நோய்வாய்ப்பட்டு அவர்கள் எல்லாம் அவதிப்பட்டு கொண்டிருக்கிறார்கள். காரணம் அந்த புழுதியினுடைய சுவாசத்தை சுவாசிப்பதனால அவர்களுக்கு ஆஸ்மா நோயும், டீ.பி. நோயும் வருவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கிறது. அதனால இந்த மகாகணபதி குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்வதாகவும், அதையும் மீறி கல்குவாரிக்கு அனுமதி கொடுத்தால் மாநில தலைவர் டாக்டர் அன்புமணி அவர்களை வரவழைத்து மிகப்பெரிய ஒரு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு ஏற்பாடுகளை செய்டுவிடுவோம் என்று கூறினார்.

26. **திரு. சு.பன்னீர்செல்வம், த/பெ. சுப்பிரமணி, குந்தாணிபாளையம்.**

மகாகணபதி புளூ மெட்டல்ஸ் குவாரிக்கு அருகில் பொதுமக்கள் இல்லாததால் அனுமதி தரலாம் என கூறினார். மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்கள் இதுவரை காலை முதல் தற்பொழுது வரை நடந்த கருத்துக் கணிப்பு கூட்டமானது மாவட்ட ஆட்சித்தலைவரின் ஒப்புதலுடன், மாவட்ட சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு குழு அவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் குறுந்தகட்டுடன் பரிந்துரை செய்து அனுப்பப்படும் என்பது தகவலாக தெரிவிக்கப்படுவதாக கூறினார். இத்துடன் பொதுமக்கள் கருத்துக் கணிப்பு கூட்டம் இனிதே நிறைவடைகிறது என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், குப்பம் கிராமம், புல எண். 511/1, 511/2 மற்றும் 512/2-ல்., 3.45.53 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ள திருவாளர்கள் மகாகணபதி புளூ மெட்டல் நிறுவனத்தினரின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் பொதுமக்கள் கருத்துக் கணிப்பு கூட்டத்தில் கலந்து கொண்ட குப்பம் கிராமத்தை சார்ந்த பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு. உங்களுடைய கருத்துக்கள் அனைத்தும் முறையாக பதிவு செய்து மாவட்ட அளவிலான நிர்வாகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, மாநில அளவிலே இக்கருத்துக்களை கொண்டு செல்லப்படும் என்பதை தெரிவித்துக் கொள்வதாகவும், மேலும்,

பொதுவாகவே ஒரு Project பொருத்தவரையில் சமூக அக்கரையுள்ள அனைத்து நபர்களும் இதில் கலந்து கொள்ள வேண்டும்.

உங்களது கருத்துக்களை பெற வேண்டும் என்பது இந்த மாநில அரசின் சம்மந்தப்பட்ட சரத்துக்களாக, நோக்கமாக இருக்கிறது. அனைத்து மக்களுக்கும், அலுவலர்களுக்கும் சமூதாய பொறுப்பு இருக்கிறது. சுற்றுச்சூழல் பொறுப்பு இருக்கிறது. ஏற்கனவே பல்வேறு அமைப்பினர் சொன்னது போல தற்போதைய சந்ததிகள் மட்டும் அல்ல, எதிர்கால சந்ததியும், நிலம், நீர், காற்று ஆகிய அனைத்து சம்மந்தப்பட்ட ஒரு சுற்றுச் சூழலே நாம் மிகவும் கவனமாக இருந்து சுத்தமான, சுகாதாரமான எதிர்காலத்தை உருவாக்குவோம் என்பதில் மாற்று கருத்து எதுவும் இல்லை என்றும், எனவே சம்மந்தப்பட்ட கருத்துக்களை உரிய முறையிலே, பதிவு செய்து கொண்டு மேல் தளத்திற்கு எடுத்துச் செல்வோம், கரூர் மாவட்டத்திலே நடக்கும் இந்த குவாரி தொழில்கூட எந்த அளவுக்கு சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடத்த முடியுமோ அதை முறையாக கண்காணித்து செயல்படுத்துவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என்று அனைவருக்கும் நன்றியினை கூறினார்.

அதன்பின்பு பொதுமக்கள் சமர்ப்பித்த எழுத்துப்பூர்வமான மனுக்கள் பெறப்பட்டது. நிகழ்வின் போது பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

30/01/2026

**மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**கரூர்.**

**மாவட்ட வருவாய் அலுவலர்,**
**கரூர்.**